(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 208/2017 **P**.**W** - 5

Name : மகாலிங்கம்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 24-08-2021.

முதல் விசாரணை:-

**நான் அச்சம்பத்து லாலாசத்திரம் காலனியில் குடியிருக்கிறேன். அருகில் மாப்பிள்ளை விநாயகர் காலனியில் வாட்ச்மேனாக வேலை செய்கிறேன். லாலா சத்திரம் காலனி அருகில் ஒரு தென்னந்தோப்பின் அருகில் சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு நான் சம்பவ இடம் பக்கமாக நடந்து வந்துகொண்டிருந்தபோது, போலீசார் அங்கு விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நாகமலை புதுக்கோட்டை போலீசார் என்னை சாட்சியாக இருக்கச் சொன்னார்கள். மண்ணை எடுத்தார்கள். நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர், மற்றும் அத்தாட்சியில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். என்னுடைய சேர்ந்து கையெழுத்து செய்தவர் யார் என்று எனக்குத் தெரியாது. அவர் எதேட்சையாக அந்தப் பக்கம் வந்தார். பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள எனது கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆகும். அங்கு ஒரு கல்லை எடுத்தார்கள், மண் எடுத்தார்கள் மற்றும் போட்டோ எடுத்தார்கள். அங்கிருந்து போஸ்ட்மார்ட்டம் செய்வதற்காக லைசன்ஸ் ஒன்றும் எடுத்தார்கள். அது என்னிடம் காட்டப்படும் லைசன்ஸ் ஆகும். அன்று ....**

கைப்பற்றியது என்னிடம் காட்டப்படும் கல்லாகும் மற்றும் இரத்தம் பட்ட, மற்றும் இரத்தம் படாத மண்ணாகும். அந்த கல் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரத்தம் பட்ட மண் சா.பொ.3. இரத்தம் படாத மண் சா.பொ. 4. லைசன்ஸ் சா.பொ.5 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை-</u>

நான் அன்றைய தேதியில் என்னுடைய வாட்ச்மேன் வேலை நேரம் முடிந்து, லாலா சத்திரம் காலனி பக்கம் வந்தேன். என்னை போலீசார் விசாரிக்கும்போது விவசாயம் பார்ப்பதாக சொன்னேன். நான் கையெழுத்து செய்த பேப்பர்களில் என்ன எழுதியுள்ளது என்று நான் படித்துப் பார்க்கவில்லை, போலீசார் என்னிடம் படித்துக் காண்பிக்கவில்லை. நான் அங்கு போவதற்கு முன்பே போலீசார் அங்கிருந்தார்கள். போலீசார் அங்கிருந்து சென்ற பின்னர் நான் புறப்பட்டு சென்றேன். என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பர்களில் அங்கிருந்த அதிகாரி எழுதினார், அவர் யார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. கல் எடுத்த விபரத்தையும், போட்டோ எடுத்த விபரத்தையும் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த இடத்தில் மொத்தம் 5 ,6 போலீசார்கள் இருந்தார்கள். மண் வகைகளை எடுத்தது ஒரு அதிகாரி, அவர் யார் என்று எனக்குத் தெரியாது. அடிபட்டு கிடந்த இடத்திலிருந்து மண்ணை எடுத்தார்கள். நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில் எந்த வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்யவில்லை என்றும், நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் லைசன்ஸை வாங்கி பார்க்கவில்லை. அது யாருடைய லைசன்ஸ் எனக்குத் தெரியாது, காஜிமார் தெரு என்று

**சொன்னார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக அன்றைய தேதியில் விசாரணை செய்தபின்னர், என்னை விசாரிக்கவில்லை. என்னை விசாரித்து எழுதிக் கொண்டார்கள். அவ்வாறு என்னை விசாரித்ததில் நான் கையெழுத்து செய்தேனா என்றால் மொத்தம் இரண்டு பேப்பர்களில் கையெழுத்து செய்தேன். அது என்ன பேப்பர் என்று எனக்குத் தெரியாது. என் முன்னிலையில் கல், லைசன்ஸ் மற்றும் போட்டோ எதுவும் எடுக்கவில்லையென்றால் சரியல்ல. போட்டோ எடுக்கும்போது சுமார் 8.30 மணி இருக்கும். போலீசார் விசாரணையில் நான் தேதி, மாதம், வருடம் மற்றும் நேரம் குறித்து சொல்லவில்லை.**

**மறுவிசாரணை - இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.